with the legislators who are interested in it and convince the Central Minister that it is desirable to instal the idol and thus allay the fears that are entertained by the Members of this House ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு கேள்விதான் போடலாம் என்பது முறை. தொடர்ந்து கேள்விகள் போட முடியாது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே தெரிவித்தபடி, இந்த அரசு செய்யவேண்டிய பணிகளைச் செய்திருக்கிறது. மத்திய அரசுதான் முடிவு கட்ட வேண்டும். அந்தக் குழுவினர் மத்திய கல்வி அமைச்சரைச் சந்தித்து, அதைப் பார்வையிடவேண்டும் என்று அவர்கள் விரும்புவார்களானால், அதற்கான ஏற்பாட்டை மாநில அரசு செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடவுள் இல்லாத கோவில் என்பது ஒரு 'ஒண்டர்' ஆக இருக்கிறது' என்று சொன்னார்கள். அதுவே 'ஒன் ஆஃப் தி ஒண்டர்ஸ் ஆஃப் தி ஒரல்டு' என்பதாக இருக்கும் என்று சொன்னார்கள். அந்த அதிசயத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாற்ற விரும்புகிறார்களா அல்லது அந்த அதிசயத்தை நிலைநாட்ட விரும்புகிறாரா என்று தெரியவில்லை. ஆகவே அது ஒரு அதிசயமாகவே இருக்க வேண்டுமென்றால், அதுவும் ஒரு அதிசயமாகக் கருதப்படும்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : கஜானாவில் பணம் செலுத்தப்படுவது ஒரு புறமிருக்க, மீண்டும் அந்தக் கோவிலைத் திறப்பது பற்றி மறுபடியும் முயற்சி செய்து, எப்படியும் அந்தக் கோவிலைத் திறப்பதற்கான வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, திரு. கிருபானந்த வாரியார் அவர்களால் ஒரு லட்ச ரூபாய்க்குமேல் நிதி சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அந்த நிதியை எப்படி வைத்துக்கொள்ளுவது, யார் வைத்துக் கொள்ளுவது என்பதெல்லாம் அந்தக் குழுவில்தான் முடிவு செய்து, அதை அவர்கள்தான் தக்க வகையில் செலவழிப்பார்கள். அந்தக் குழுவினருடைய விண்ணப்பம் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இரு முறை அனுப்பிவைக்கப்பட்டும், அவர்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை என்று முன்பே சொன்னேன். மத்திய கல்வி அமைச்சரை அந்தக் குழுவினர் சந்தித்து, தக்க முடிவு எடுத்துக்கொள்ளப்படுமானால், அதன்பேரில் இந்த அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முன்வரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒத்திவைக்கப்பட்ட கேள்விகள் 88 முதல் 92 வரை இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்.

Mettur Dam

* 88 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have decided to deplete the Mettur Dam to supply water for the purpose of irrigation ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விளைந்து வருகிற பயிர்களை இயன்ற அளவுக்குப் பாதுகாக்கும் பொருட்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரை 15—2—1968 முதல் 19—2—1968 வரை 22·05 அடியிலிருந்து 14·55 அடி மட்டத்திற்குக் குறைத்து விட்டு சுமார் 205·4 கோடி கன அடி நீர் விடப்பட்டது. காவேரி—வெண்ணாறு—கல்லணைக் கால்வாய் இவற்றிடையே முறைத்திட்டத்தை மேற்கொள்வதன் மூலம் நீர் விடப்பட்டது.